**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.07/2025 In O.S.No.107/2018**

1. பழனிச்சாமி நாயக்கர் (இறப்பு)
2. சீலம்மாள்
3. முருகவேல்
4. வேலுச்சாமி
5. பாலசரவணன்
6. தனபதி
7. வளர்மதி … மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. பழனியம்மாள்
2. சின்னம நாயக்கர்
3. பாப்பம்மாள்
4. தங்கவேல்
5. ராணி (எ) தொப்பக்காள்
6. பழனியம்மாள்
7. ரெங்கசாமி
8. ஆண்டிவேல்
9. பால்சாமி
10. பொன்னுசாமி
11. சகாதேவன்
12. முத்துலெட்சுமி
13. நாகலெட்சுமி
14. பொம்முத்தாயி
15. நாகலெட்சுமி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.10.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.மலர்க்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.விஜயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. மற்ற வாதிகளுக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கை பாகம் கேட்டும், இதர பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் 1வது சாட்சி குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு உள்ளது. அப்போது குறுக்கு விசாரணைக்காக வழக்குரையை படித்து பார்த்த போது அ பட்டியல் 4ம் இன சொத்தான சர்வே எண்.1574/1ல் உள்ள கிணறு, 5 ஹெச்.பி. மின் மோட்டார் மற்றும் மின் இணைப்பு எண்.11 ஆகியவை தவறுதலாக 6ம் இன சொத்தில் இருப்பதாக காட்டி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

2) உண்மையில் மேற்படி கிணறு, மின் மோட்டார் மற்றும் மின் இணைப்பு ஆகியவை சர்வே எண்.1574/1ல் தான் உள்ளது. 6ம் இன சொத்தான சர்வே எண்.1571/1ல் கிணறு எதுவும் கிடையாது. மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேலும் பாகம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் சரியான சொத்து விபரம் காட்ட வேண்டியது அவசியமாகும். எனவே தட்டச்சு பிழை காரணமாக ஏற்பட்ட தவறினை திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**4 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 1 முதல் 3 மற்றும் 5 முதல் 14 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்**

3) எதிர்மனுதாரர்கள் எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். தட்டச்சு பிழை காரணமாக 6ம் இன சொத்தில் கிணறு இருப்பதாக தவறாக காட்டப்பட்டுள்ளதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. வாதி தரப்பு சாட்சியங்கள் அனைத்தும் முடிக்கப்பட்டு தற்போது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக போடப்பட்டுள்ள சமயத்தில் திருத்த மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

5) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் தட்டச்சு பிழை காரணமாக தாவா சொத்து விபரத்தில் உள்ள கிணறானது ஒரு அயிட்டத்தில் இருந்து மற்றொரு அயிட்டத்தில் குறிப்பிடப்பட்டு விட்டது என்றும் எனவே அதை திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பதாக வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு கடும் ஆட்சேபனை எதுவும் செய்யப்படவில்லை.

6) மாறாக விசாரணை தொடங்கப்பட்ட பின்னிட்டு இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என ஆட்சேபனை செய்யப்பட்டது. திருத்தப்பாடு விபரங்களை பரிசீலனை செய்கையில், ஒரு இனச் சொத்தில் உள்ள கிணறானது தட்டச்சு பிழை காரணமாக மற்றொரு அயிட்டத்தில் காட்டப்பட்டுள்ளது என்பது மட்டுமே திருத்தப்பாடு விபரமாக உள்ளது. மேற்படி திருத்தப்பாட்டை அனுமதிப்பதால் இவ்வழக்கின் தன்மையோ அல்லது எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்போ ஏற்படாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/-ஐ செலவுத்தொகையாக 28.10.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.10.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 07/2025**
**in**
**O.S.No. 107/2018**

**DRAFT / FAIR ORDER**

**D.D.24.10.2025**

*********************************